5 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயமுத்தூர்.

அசல் வழக்கு.285/2018

நாள் -09/07/2026

**சாட்சி பி.சா.1 திருமிகு.செல்வகுமார் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

1. நான் பி.எஸ்.ஸி படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் எனக்கு நன்றாக படிக்க தெரியும். வாதி கீதாராணியை எங்கள் தாய்மாமா பையனுக்கு கல்யாணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். கீதாராணிக்கு 1974 ல் கல்யாணமானது. சொத்தானது ஆரம்பத்தில் எனது அம்மாவின் அப்பாவிற்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா இறந்த பிறகு சொத்தில் தனக்குள்ள பாதி உரிமையை என் தாய் மாமா என் அம்மாவின் பெயருக்கு எழுதி வைத்துவிட்டார் என்றால் அப்படி எழுதி கொடுத்தது போல் தெரியவில்லை. அவ்வாறு எழுதிக்கொடுத்து என் தாயார்தான் முழு சொத்திற்கும் உரிமையாளராக இருந்து அனுபவித்து வந்தார் என்றால் ஒரு பகுதியை அனுபவித்து வந்தார். எனது அப்பாவும் அம்மாவும் வழக்கு சொத்து வீட்டில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. என் அப்பா 2011 ம் ஆண்டு இறந்தார். என் தாயார் 2015 ம் ஆண்டு ஜனவரி மாதம் இறந்தார். என் தாயாருக்கு நானும் வாதியும் மட்டும்தான் வாரிசுகள் என்றால் சரிதான். உயில் எழுதி வைப்பதாக என் அம்மா எந்த சமயத்திலும் என்னிடமோ யாரிடமோ சொன்னதில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதி வைப்பதாக என் அம்மா யார் முன்னிலையில் சொன்னார் என்றால் என் முன்னாடிதான் சொன்னார். உயில் எழுதி வைப்பதாக என் அம்மா சொன்ன போது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் என்னுடைய மகன் இருந்தார். அவர் ரொம்ப முன்பாகவே எழுதி வைத்துவிட்டார். அதனால் எனக்கு சரியாக தெரியாது. உயில் எழுதுவதற்கு என் அம்மாவை என் அப்பாதான் ரிஜிஸ்டர் ஆபிசுக்கு கூட்டி சென்றார். செலவை அவர்களாகவேதான் செய்து கொண்டார்கள்.

3. உயிலில் யார் சாட்சி கையெழுத்து போட்டது என்றால் என் அப்பாவிற்கு தெரிந்தவர்கள் போட்டார்கள். உயிலில் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் எங்களது உறவினர்கள் கிடையாது என்றால் சரிதான். சாட்சிகள் எங்கள் உறவினர்களோ எனது

அப்பாவிற்கு தெரிந்தவர்களோ எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்களோ கிடையாதென்றும் அவர்களை நான்தான் ஏற்பாடு செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் பல உறவினர்கள் இருந்தும் யாரும் உயிலில் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். உயில் எழுதி வைத்த போது என் தங்கைக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது அம்மா இறந்து 1 வருடம் கழித்து வருடாந்திரம் கும்பிடும் போதுதான் என் தங்கச்சிக்கு இந்த விசயம் தெரியும். ஏன் என் தங்கையிடம் இந்த விபரத்தை சொல்லவில்லையென்றால் அவர்கள் கேட்டுக்கொள்ளவில்லை.

4. என் அம்மா சாகும் வரை என் தங்கையுடன் நல்ல முறையில்தான் இருந்து வந்தார்கள். என் அம்மாவிற்கும் என் தங்கைக்கும் எந்த மனஸ்தாபமும் இல்லை. என் அம்மாவிற்கு இந்த சொத்தை தவிர வேறு சொத்து உள்ளதா என்றால கந்தேகவுண்டன்சாவடியில் ஒரு நிலம் இருக்கிறது. அதை என் மாமா அனுபவித்து வருகிறார். அதை என் தங்கச்சிக்கு எழுதிக்கொடுத்துவிட்டார்கள். நான் சொல்வது போல் என் தங்கச்சிக்கு எழுதி கொடுக்கவில்லையென்றும் வழக்கிற்காக வேண்டி அவ்வாறு உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா இறக்கும் காலம் வரை என் தங்கை வந்து அவ்வப்போது பார்த்துவிட்டு செல்வார்களா என்றால் பார்த்துவிட்டு செல்வார்கள். 1981 ம் ஆண்டிலிருந்து என் தாயார் பக்கவாதம் வந்து சரியாக பேச முடியாமல் இருந்தார் என்றால் சரிதான். அவ்வாற வந்து கொஞ்சநான் பேச முடியாமல் இருந்தார்.

5. என் தங்கைதான் என்அம்மாவை முழுவதும் பார்த்துக்கொணடார் என்றால் சரியல்ல.நானும் என் அப்பாவும் என் மகனும் பார்த்துக்கொண்டோம். என் தங்கச்சி அவ்வப்போது வந்து பார்த்துவிட்டு செல்வார். என் தங்கை தான் என் அம்மாவை பார்த்து வந்தார் என்றும் அதனால் வழக்கு சொத்தில் பாதியை என் தங்கைக்கு கொடுக்கும் மனநிலைமையில்தான் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு ஒரே மகன் என்றால் சரிதான். என் மகனுக்கு 37 வயது. என் மகனுக்கு இன்னும் திருமணமாகவில்லை என்றால் சரிதான். என் சகோதரிக்கும் ஒரே மகன் என்றால் சரிதான். என் தங்கைக்கு உயிலை படித்துக்காண்பித்த பொழுது நகைகள் கொடுததததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் அவ்வாறு எந்த ஒரு நகையையும் கொடுக்கவில்லை என்றால்

சரியல்ல. என் அம்மா வங்கியில் பணம் வைத்திருந்ததாகவும் அதை என் தங்கைக்கு கொடுக்க சொன்னதாகவும் பதிலில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு என் தங்கைக்கு பணத்தை எதையேனும் எடுத்துக்கொடுத்தோமா என்றால் இல்லை.

6. என் தாயார் நான் சொல்வது போல் ஒரு உயிலை எழுதி வைக்கவே இல்லையென்றும் எனக்கு மட்டும் உயிலை எழுதி வைக்கும் மனநிலையில் என் தாயார் இல்லையென்றும் உயிலை எழுதும் நல்ல மனநிலையிலேயே என் தாயார் இல்லை யென்றும் சொத்தை முழுமையாக அடைய வேண்டுமென்பதற்காக நானாகவே எனக்கு தெரிந்த ஆட்களின் துணை கொண்டு உயில் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும் 1981 ம் ஆண்டிலிருந்து இறக்கும் வரை பக்கவாதம் வந்து என் தாயார் பேச முடியாமல் படுத்த படுக்கையாக இருந்தார் என்றும் சொன்னால் சரிய்லல. என் தங்கைக் வழக்கு சொத்தில் பாதி பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

/sd/ P.K.Sivakumar,
V Additional District Judge,
Coimbatore

/True copy/